கணக்கை அறிந்து அதை அந்தந்த ஆணையர்கள் தெரிவித்து உரிய முறையில் மின்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்து பழுதடையும் விளக்குகளைப் புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மின்சார வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமே இதை ஒப்புவித்துவிடலாம் என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Boring set in Thiruvalangadu Union.

* 563 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any boring set is being kept idle in Thiruvalangadu Panchayat Union in Tiruttani taluk; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள விவசாயிகள் துளை போடும் கருவியைப் பயன்படுத்த முன்வரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் துளை போடும் கருவிகளை விவசாயிகள் பயன்படுத்த முன்வரவில்லை என்று சொன்னார்கள். அங்கிருக்கும் நிலைமை கடந்த பத்தாண்டுகளாக போரிங் செட் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதற்கான நடவடிக்கையை அங்கிருக்கும் ஒன்றியம் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலே தலையிட்டு போரிங் செட்டைச் சரி செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்காக 28,515 ரூபாய் 17 காசு கொடுத்து வாங்கப்பட்ட துளைபோடும் கருவி சரியாக இயங்காத காரணத்தாலும், மேலும் அந்தக் கருவிக்கு நாள் ஒன்றுக்கு வாடகை 60 கொடுக்க இயலாத காரணத்தாலும், அடிக்கடி பழுதடைந்து விடுகிறது என்ற காரணத்தாலும் பயன்படுத்த முடியாமல் இருந்தது. உழவர்களிடத்திலிருந்து குறைந்த வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து அது

1973 டிசம்பர் 1]

பரிசீலனை செய்யப்பட்டு அது ஓட்டுவிக்கின்ற முதலுக்கும் அதற்கும் ஈடுகட்டி வராது என்ற காரணத்தால் குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அதை விற்றுவிடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி ஊராட்சி ஒன்றியம் அனுப்பி இருக்கிறது. அதைக் குறைந்த விலைக்குப் பல பேர் கேட்ட காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுத்து விடலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. அதைப் பழுது பார்ப்பதைவிட புதிதாக வாங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையில் பாலம்.

* 564 வினா—திரு. அ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையின் 3/7 மைலிலுள்ள பாலம் போக்குவரத்துக்காக எப்போது திறந்து வைக்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாலவேலை 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவுபெற்றது. இப்பாலத்திற்கான அணுகு சாலைகளைப் போட துணை மதிப்பீட்டுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு வேலையை எடுத்துக்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

Buses from Egmore, Central Stations.

* 565 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to run special bus service to assist the passengers at Egmore and Central Stations in the Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) ஆம். இரயில் வண்டிகளின் போக்குவரத்து நேரங்களுக்கு ஏற்ற வகையில், பல்லவன் போக்குவரத்துக் கழகம் 7—6—1973 முதற் கொண்டு, எழும்பூருக்கும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு மிடையில் இரண்டு தனிப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளைத் தொடங்கியுள்ளது.